# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 06 புதன்கிழமை (20.06.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 203


# வெற்றிலைக்கேணி, பருத்தித்துறையில் கடற்புலிகள் - கடற்படையினர் மோதல்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு கடற் பகுதியில் நேற்று மாலை 4.45 மணியளவில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் பெரும் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் 20 படகுகள் கொண்ட அணி மீது, அந்தப் பகுதியூடாக வந்த கடற்படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் -

அதன்பின்னர் இரு தரப்புகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது என்றும் - அறியப்படுகிறது.

மோதலைத் தொடர்ந்து கடற்படையினர் காங்கேசன்துறைப் பக்கம் சென்றனர். அவ்வேளை கடற்புலிகள் பருத்தித்துறைக் கடலில் தரித்து நின்று கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்பட்டது.

கடற்புலிகள் பருத்தித்துறைக் கடலில் தரித்து நிலை (08ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே.....**

5ஆம் பக்கத்தில் கல்விச்சுடர் தரம் 5 மாணவருக்கு புலமைப்பரீட்சை மாதிரி வினாத்தாள்

## அல்லாரைப் பகுதியில் நேற்றுக் காலை மோதல்

அல்லாரை சனசமூக நிலையத்துக்குச் சமீபமாக, கொற்புலவு மயானத்திற்கு அருகில் நேற்றுக் காலை 8.30 மணியள (08ஆம் பக்கம் பார்க்க)

### சம்பூர், மூதூர் கிழக்குப் பகுதிகளில்

# 12,000 தமிழ்க்குடும்பங்களின் வளமான பூர்வீக நிலங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கபளீகரம்!

## தரிசுக் காணிகளில் குடியேற்ற ஏற்பாடு

திருகோணமலை, ஜூன் 20

திருகோணமலை மாவட்டத்தில், சம்பூர் மற்றும் மூதூர் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த பன்னிரண்டாயிரம் தமிழ்க் குடும்பங்களின் வளம் நிறைந்த 5,547 சதுர மீற்றர் நிலம் -

அரசாங்கத்தினால் - ஜனாதிபதியினால் - உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுக் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வருட முற்பகுதியில் சம்பூர், மூதூர் பகுதிகளில் நடைபெற்ற போரினால் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் இப்போது திருகோணமலை நகரப் பகுதியில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

இவர்களை திருமலை மாவட்டத்தில் உள்ள தரிசு நிலங்களில் குடியேற்றத் திட்டமிடப் பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

சம்பூர், மூதூர்கிழக்குப் பகுதிகளை அதி உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தும் விசேட வர்த்தமானியை மே மாதம் முப்பதாம் திகதி ஜனாதிபதி வெளியிட்டிருந்தார்.

அந்த வர்த்தமானியில் உள்ளடக்கப் பட்ட விவரங்கள் ஒருசில நாள்களுக்கு முன்னரே வெளியே வந்தன.

உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தப் பட்ட சகல செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தும் தகுதி வாய்ந்த அதிகாரியாக, கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டிய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் - சம்பூர் மற்றும் மூதூர் கிழக்குப் பகுதியை உள்ளடக்கியதாக கிழக்கு மாகாணத்தில் மேற்குக்கரை யோரப் பிரதேசங்களை பவுல் பொயின்ற், கல்லடிச்சேனை, உப்பூறல் அடங்கிய கடற்கரைப் பிரதேசங்களும் - தெற்கில் செல்வாநகர், தோப்பூர், பச்சநூர் பிரதேசங்களும் -

மேற்கில் - கல்லடிச் சேனை ஆற்றின் மேற்குக் கரை, பச்சிலைக் கல்லடிச்சேனை தெற்கு, மூதூர் கல்லடிச் சேனை வடக்கு ஆகியப் பிரதேசங்களும் -

வடக்கில் - கொட்டியாரக்குடா, தெற்குக் கரை, கல்லடிச்சேனை ஆறு, சம்பூர் பவுல் பொயின்ற் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக இந்த அதியுயர் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற (07ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளைப் பலவீனப்படுத்திப் பேச்சு மேசைக்கு இழுத்து வருவதையே எமது தரப்பு விரும்புகிறது

## நிலங்களைக் கைப்பற்றுவது நோக்கமல்ல என்கிறார் கோத்தபாய



கொழும்பு, ஜூன் 20

நிலங்களைக் கைப்பற்றுவதில் எமக்கோ இராணுவத்துக்கோ விருப்பம் இல்லை. விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி அவர்களைப் பேச்சு மேசைக்கு இழுத்து வருவதையே சகலரும் விரும்புகின்றனர்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இப்படிக் கூறியுள்ளார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் 'ஐலண்ட்' வார இதழுக்கு அளித்த பேட்டியில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

வன்னியை கைப்பற்றுவதில் எமக்கு நாட்டமில்லை. அது நடைமுறைச் சாத்தியமும் இல்லை. விடுதலைப்புலிகளின் பலத்தை, போராளிகளை, அவர்களின் சொத்துக்களை, தளங்களைப் பலவீனப்படுத்த வேண்டும். அதனைத்தான் வன்னியில் செய்கிறோம்.

வன்னியில் நடந்த சமரில் எமக்கு அழிவு எதுவும் உண்டாகவில்லை. நாம் வெற்றியீட்டியுள்ளோம். வன்னியில் மோட்டார் குண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததாலேயே ஆயுதக் களஞ்சியம் எதிர்பாராத விதமாக வெடித்துச் சிதறியது.

**வளையாத மனிதர் பிரபா**

பிரபாகரனின் மனநிலையைப் புரிந்து (08ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை கேட்கும் ஆயுத உதவிகளை வழங்குவதற்கு இந்திய அரசு தயார்

## இராணுவத் தளபதிகள் மாநாட்டில் அந்தோனி



கொழும்பு, ஜூன் 20

இலங்கை அரசு கேட்கும் அனைத்து இராணுவ உதவிகளையும், தளபாடங்களையும் வழங்க இந்திய அரசு தயாராகவே உள்ளது என அறிவித்திருக்கின்றார் அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ. கே. அந்தோனி.

இராணுவத் தளபதிகளின் ஒருங்கிணைப்பு மாநாடு புதுடில்லியில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. அதனைத் தொடக்கிவைத்து உரைநிகழ்த்தியபோதே அந்தோனி மேற்கண்ட தகவலையும் கூறிவிட்டார் என டில்லி ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபடும் நோக்கில் (08ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் குறைநிரப்புப் பிரேரணை நேற்று 20 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

## 20 எம்.பிக்கள் நாடாளுமன்றம் வராததால்!

கொழும்பு, ஜூன் 20

ஏழு புதிய அமைச்சுகளுக்கான குறைநிரப்பு நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் இருபது மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. எதிர்க்கட்சி உட்பட பிரதான கட்சிகள் ஒன்று திரண்டு இந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்த போதிலும், ஆளும் தரப்பிலும் எதிர்த் தரப்பிலுமாக சுமார் இருபது வரையான எம்.பிக்கள் நேற்று சபையில் பிரசன்னமாகாத காரணத்தால் அரசு இந்தப் பலப் பரீட்சைக்களத்தில் (08ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் இருவரைக் காணவில்லை யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு

கொழும்பில் காணாமற் போன இருவர் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரணி, இயற்றாலையைச் சேர்ந்த கனகரத்தினம் வினோதன் (வயது - 20) என்ற மாணவன் கொழும்பில் தங்கியிருந்த வேளை கடந்த மாதம் 20ஆம் திகதி தொடக்கம் காணாமற் போயுள்ளதாக அவரது தந்தை முறைப்பாடு செய்துள்ளார்.

விடுதி ஒன்றில் தங்கியிருந்த அல்வாயைச் சேர்ந்த எஸ். இந்திரலிங்கம் (வயது 33) என்பவர் கடந்த 28ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டார் என்றும் அதன் பின்னர் அவர் காணாமற் போயுள்ளார் எனவும் அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார். (அ-1)

# தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை சூடு

## ஒருவர் படுகாயம்; கச்சதீவு அருகே சம்பவம்

இராமேஸ்வரம், ஜூன் 20

கச்சதீவு அருகே மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்களை நோக்கி இலங்கைக் கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மீனவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை மீனவர்களால் தமிழக மீனவர்கள் தாக்குதலுக்குள்ளாகின்றனர் என குற்றஞ்சுமத்தப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் காலை இந்த அனர்த்தம் இடம்பெற்றிருப்பதாக தமிழக நாளேடுகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. சம்பவ தினம் 700 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் இராமேஸ்வரம் (08ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாடுகளில் புலிகளுக்கு நிதி சேகரித்த சந்தேகத்தில் விமான நிலையத்தில் ஒருவர் கைது!

சர்வதேச நாடுகளில் வாழும் தமிழர்களிடம் விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் வெளிநாட்டுக்குச் செல்வதற்காக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்குச் சென்றபோது, பொலிஸ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இவரைக் கைது செய்தனர் எனக் கூறப்பட்டது. இவர் கொழும்பு - நாவல பகுதியில் வசித்துவந்த போதிலும், ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர் என்று பயங்கரவாதப் பிரிவினர் தெரிவித்தனர். வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களை தொலைபேசி மூலம் மிரட்டி, இந்த நபர் பணம் சேகரித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக இவர் அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்றுவந்தார் என்றும் பொலிஸார் கூறியிருக்கின்றனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். குடாவில் முதன் முறையாக அறி... ...கின்றது....!

**PMC** யின்

***Master Of English - VCD System***

"வீட்டிலிருந்தே இலகுவாக ஆங்கிலத்தில் பேசுவதற்கான 30 நாள் பயிற்சி" ஆங்கிலம் கற்க நேரமில்லை என ஏங்கும் தொழில் புரிபவர்கள், மாணவர்கள், ஆங்கிலம் கற்க நேரமில்லாத இல்லத்தரசிகள், வகுப்பறையில் சேர்ந்து கல்விகற்க கூச்சமுள்ள பெரியோர்கள், இளைஞர், யுவதிகள் அனைவரும் வீட்டில் இருந்தபடியே VCD பார்த்து 30 நாள்களில் சரளமாக ஆங்கிலம் பயில ஒரு சிறந்த திட்டம்.

முற்பதிவுகள் நடைபெறுகின்றன.

முற்பதிவு செய்தவர்களுக்கே பிரதிகள் வழங்கப்படும்.

*மேலதிக விவரமறிய:* **தலைமையகம்**

**PMC**

**443, ஸ்ரான்லி வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.**

**PMC** நல்லூர் முகவர் : கமல்கண்ணன் திருமணசேவை, 171/7, மனோன்மணி அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**PMC** சாவகச்சேரி முகவர் : 190ஆம் கட்டை, ஆறுமுகம் வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

(61687)

## வாகனம் விற்பனைக்கு

புதிய இசுசு ரக வான் விற்பனைக்குண்டு (காட்சியறைதரம்) அலுமினிய பொடி, இல. LD XXXX தொடர்பு: 2222485, 0777271334

(61960)

## வாகனதிருத்தகம் வாடகைக்கு

வாகனம் திருத்தக்கூடிய சகல வசதிகளுடனும் காணி வாடகைக்குண்டு. தொடர்பு: 2222485, 0777271334.

(61957)

## FOR SALE

**Scooty Pep**

TVS Scooty pep HI Series Red, one owner (Banker Lady) brand new condition, run only 1200 Kms Rs.91500.00 Call on 0777 283795, 222 6286 for inspection only.

## கண்ணீர் அஞ்சலி

*யா/வட்டு. மத்திய கல்லூரியில் திட்டமிடல் நிதி உதவியாளராக பணியாற்றும்* செல்வி விஷ்ணுதேவி இராஜசிங்கத்தின் அன்புப் பேர்த்தியார்

திருமதி **அமராவதி சிவராமன்**

*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

ஆசிரியர் நலன்புரிக் கழகம்.
யா/வட்டு.மத்திய கல்லூரி.

(61953)

## கண்ணீர் அஞ்சலி



*எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய நண்பரான*

**மயில்வாகனம் அருளானந்தம்**

(முன்னாள் கணக்காளர், சேகர் மோட்டோர்ஸ், செல்வா ஹாட்வெயர்ஸ்)

*அவர்களின் திடீர் மரணச் செய்தியை அறிந்த நாம் அவரின் பிரிவுத் துயரால் வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.*

**சிவசக்தி மோட்டோர்ஸ்,**
*103, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

*(61798)*

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் முன்னாள் ஊழியர்

*கந்தசாமி செந்தீபன்*

அவர்களின் அன்புத் தந்தை

**தில்லையம்பலம் கந்தசாமி**

*அவர்கள் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*சாரங்கா நகைமாடம்,*
*யாழ்ப்பாணம்.* *(61954)*

**உரிமையாளரும், ஊழியர்களும்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 - 02 - 1957



உதிர்வு 01 - 07 - 2006

*அமரர்*

**தம்பிராசா விஜயபாலசிங்கம்**

(எழுதுவினைஞர், காணிப்பதிவகம், யாழ்.செயலகம்)

திதி: ஷஷ்டி

தோற்றம் மறைந்தாலும்
துயரங்கள் மறையவில்லை
காலம் மறைந்தாலும்
கவலைகள் மறையவில்லை
வாழும் காலம்வரை
உங்கள் ஞாபகம்- எம்
மனதை விட்டு அகலாது

*என்றும் உங்கள் நினைவுடன்:*
**மனைவி, பிள்ளைகள்.**

வளவத்தை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (61959)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 * 07 * 1945



மறைவு 20 * 06 * 2006

**அமரர் மருசிலின் வின்செற்**

*இல்லத்தின் வேராக நின்று எமக்காக உழைத்தவரே*
*ஆலம்விழுது போல் சொந்தங்கள் ஆயிரம் இருப்பினும்*
*அப்பா என்று அழைக்க உறவில்லாமல்*
*உன் பிள்ளைகள் துன்புறுகின்றனர்*
*எம்மைப் பிரிந்து ஓராண்டுகள் ஆனாலும்*
*ஏற்றிய தீபமாய் எம் நெஞ்சில்*
*வீற்றிருக்கும் உங்கள் நினைவுகள்.*

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

நீதிமன்ற வீதி,
மல்லாகம். (61799)

**மனைவி, பிள்ளைகள்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது பராமரிப்புப் பகுதியில் கடமைபுரியும்

**கிருஷ்ணபிள்ளை பத்மநாதன்**

அவர்களின் பாசமிகு தாய்

திருமதி **கிருஷ்ணபிள்ளை விக்கினேஸ்வரி**

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உதயன் பணிமனை,*
*யாழ்ப்பாணம்.* *(சி/52713)*

**நிர்வாக இயக்குநரும் ஊழியர்களும்.**

## கேள்வி அறிவித்தல் திருத்தம்

*14.06.2007ஆம் திகதி உதயன் பத்திரிகையில் இரண்டாம் பக்கத்தில் எம்மால் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் தொடரிலக்கம் 02இன் பகுதி 2இல் குறிப்பிடப்பட்ட "இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்க (NCCASL) உறுப்பினராகவும் M8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்." என்ற நிபந்தனை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

**பிரதம பொறியியலாளர் அலுவலகம்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**யாழ்ப்பாணம்.** *(சி/52714)*

எந்திரி க.குகநேசன்,
தலைவர்,
திணைக்கள கேள்விச் சபை.

# UTI

# யூனியன் ரஸ்ட் அன்ட் இன்வெஸ்ற்மென்ட்ஸ் லிமிட்டட்

*(கலைப்பில் உள்ளது)*

## வைப்புக்களை மீளளித்தல்

மேற்படி கம்பனியின் வைப்பாளர்களின் வைப்பு மீதியின் (முதலின்) ஒரு பகுதியானது 2006 ஜூலை 21ஆம் திகதி முதல் மீளளிப்பு செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி மீளளிப்புக்கான இறுதித் திகதியானது 2007 ஒக்ரோபர் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது. மேற்படி மீளளிப்பை அலுவலக நாள்களில் கீழ்க்காணும் முகவரியில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை கீழ்க்காணும் ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

- வைப்புச்சான்றிதழ் / மாற்றப்படாத காசோலை/ அனுமதியளிக்கப்பட்ட கடிதம் ஆகியவற்றின் மூலப்பிரதி, போட்டோ பிரதி.
- தேசிய அடையாள அட்டை / ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏனைய ஆவணங்களின் போட்டோ பிரதி.
- வைப்பாளர் இறந்திருப்பின் அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் மீளளிப்பைப் பெறுவதற்கு உரிமையுடைய சட்ட ரீதியான வாரிசுகள் பற்றிய விவரம் ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதி.
- கூட்டு வைப்புகள் (Joint Deposit) ஆயின் வைப்பாளர்களின் பெயர் விவரம் மற்றும்

  தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி, அனுமதிக்கடிதம் ஆகியவை.

மீளளிப்புகள் யாவும் வைப்பாளரின் பெயரில் எழுதப்பட்ட பிறருக்கு மாற்ற முடியாத காசோலை மூலம் வழங்கப்படும். சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடுவதாயின் அதன் விவரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

நேரில் சமுகமளிக்க முடியாதோர் மேற்படி ஆவணங்களைத் தமது தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியுடன் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட தமது பிரதிநிதி மூலம் அனுப்பித் தமக்குரிய மீளளிப்பைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் மேற்படி ஆவணங்களைச் சுயமுகவரியிடப்பட்ட கடித உறையுடன் சேர்த்து பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

2007 ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி வைப்பு மீளளிப்பைப் பெற்றுக்கொள்ளாத வைப்பாளர்கள் பகிர்ந்தளிப்பிலிருந்து விலக்கிக்கொள்ளப்படுவர் என இத்தால் அறியத்தருகிறோம்.

Liquidators
**Union Trust & Investments Ltd,**
**C/O: SJMS Associates,**
2nd Floor, No.30, Galle Road, Wellawatte
Colombo - 06. T.P.: 2508874

## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கணக்குப் பதிவாளர் (301/12) பதவிக்கான வெற்றிடம்

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் ரூபா 10/- செலுத்திச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் **தலைவர், சங்கானை ப.நோ.கூ. சங்கம், சங்கானை** என விலாசமிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும். சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும்.

**1. சம்பள அளவுத்திட்டம்:-**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை 66/2006 இற்கு அமைவாக

$$\frac{10200 - 12100}{90 \times 10 - 100 \times 10}$$

**2. தகைமைகள்:-**

அ. கூட்டுறவுப் பணியாளரின் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர் அல்லது கணக்கு இலிகிதர் பதவியில் 02 வருடத்துக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 14ஆவது சம்பளத்திட்டத்தில் 04 வருடத்துக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ.ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தி

அல்லது

இ.கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் உயர்தரம்/ க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 3 பாடங்கள் சித்தி.

**3. வயதெல்லை:-** 18 - 45

**4.** தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்சவயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

**5. விண்ணப்ப முடிவுத் திகதி:-** 06.07.2007

*தலைவர்,*
*சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை.*

(சி/52715)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி விக்னேஸ்வராவின் கட்டடம் சேதம்; மழை காலத்தில் கற்றல் நடவடிக்கை பாதிப்பு

கட்டைவேலி,ஜூன்20

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் கட்டடம் 85 வருடங்கள் பழமைவாய்ந்ததாகவும் சேதமடைந்தும் காணப்படுகின்றது. இதனால் மழை காலத்தில் வெள்ளநீர் கட்டடத்திற்குள் தேங்கி நிற்கின்றது. இதன் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன.

கல்லூரியின் கட்டடம் மிகவும் பழைமை வாய்ந்தது இதனால் அது சேதமடைந்து காணப்படுவதுடன் கூரைகளும் மிகவும் சேதமடைந்துள்ளன. அண்மையில் திடீரெனப் பெய்த பெருமழையின்போது கூரையில் ஒழுக்குகள் ஏற்பட்டு கட்டடத்திற்குள் வெள்ளம் தேங்கியது. இதன்போது மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு மாணவர்கள் வேறு கட்டடத்திற்கு மாற்றப்பட்ட னர்.

அதிபர் அலுவலகத்திற்குள்ளும் ஒழுக்குகள் ஏற்பட்டு வெள்ளம் தேங்கியது. இதனால் அலுவலகக் கடமைகளும் பாதிக்கப் பட்டன.

இக்கட்டடத்தைப் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் பல்வேறு தடவைகள் கோரிக்கை விடுத்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென கல்லூரிச் சமூகம் விசனம் தெரிவிக்கின்றது. (202-275)

## ஏழாலை ம.ம.வியின் சுற்றுவேலி புனரமைப்பு

ஏழாலை,ஜூன்20

ஏழாலை மத்திய மகாவித்தியாலயத்தின் சுற்றுவேலி புனரமைக்கப்பட்டுள்ளது. சேதமடைந்திருந்த சுற்றுவேலியின் புனரமைப்பை பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினரும் கண்ணகி விளையாட்டுக் கழகத்தினரும் இணைந்து மேற்கொண்டனர்.

புனர்மைப்பு வேலைகளுக்கென ஒரு லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. (202-45)

# நயினை உற்சவ காலத்தில் குடிதண்ணீர் ஒரு மைல் தூரத்திலிருந்து எடுத்துவர ஏற்பாடு

நயினை,ஜூன்20

நயினாதீவு நாகபூஷணி அமுதசுரபி மண்டபத்திற்கு திருவிழாக் காலத்திற்குத் தேவையான குடிதண்ணீர் சுமார் ஒரு மைல் தொலைவிலிருந்தே குழாய் மூலம் எடுத்துவரப்படுகின்றது. இதற்கென 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிடப்படுகின்றது.

இத்தகவலை அமுதசுரபி அன்னதான சபையின் உப தலைவர் ம.அம்பிகைபாகன் தெரிவித்தார்.

நயினாதீவுப் பிரதேசத்தில் குடிதண்ணீரைப் பெறுவது பெரும் சிரமமாக உள்ளது. 5ஆம் வட்டாரத்திலேயே குடிதண்ணீரைப் பெறலாம். அங்கு எமது சபைக்குச் சொந்தமான காணி ஒன்று உள்ளது. அங்கிருந்து மண்டப விடுதிக்குத் தேவையான குடிதண்ணீரைக் குழாய் மூலம் எடுத்து வருகின்றோம். இதற்கு குறிப்பிட்ட தொகைப் பணம் தேவைப்படுகின்றது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - உற்சவ காலங்களில் வெயில் மற்றும் மழையிலிருந்து யாத்திரிகர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் அமுதசுரபி அன்னதான சபை முன்புறம் உள்ள வீதியிலும் காணியிலும் பந்தல்களையும் தகரக் கொட்டகைகளையும் அமைத்துள்ளது (202-111)




**காரைநகர் சமுர்த்தி வங்கி அண்மையில் நடத்திய புத்தாண்டு தின நிகழ்வில் வங்கி நடத்திய சீட்டிழுப்பில் அதிர்ஷ்டசாலியைக் காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் குலுக்கல் முறையில் தெரிவு செய்வதைப் படத்தில் காணலாம். அருகில் காரைநகர் பிரதேச செயலக கணக்காளர் என். இராசநாயகம், சமுர்த்தி வங்கி முகாமையாளர் தி.சசிக்குமார் ஆகியோரும் காணப்படுகின்றனர். (73)**

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்20

நல்லூர் கைலாசபிள்ளையார்ஆலய சிவனின் தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று 9 மணிக்கு சுவாமி தேரேறி வீதியுலா வருவார்.

மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்தத் திருவிழா இடம்பெறும்.

அதிகாலை 5.30 மணிக்கு ஆனி உத்தர தரிசனமும் 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (203)

* * *

திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (203-111)

* * *

நெடுந்தீவு நடுக்குறிச்சி சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கும் தீர்த்தம், கொடியிறக்கம் என்பன மாலை 4 மணிக் கும் நடைபெறும். (203-111)

* * *

நல்லூர் வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புஸ்பரத வெள்ளோட்ட விழா நாளை வியாழக்கிழமை காலை 7.24 மணிக்கு நடைபெறும். (203-111)

* * *

கைதடி கயற்சிட்டி கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந் திருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28அம் திகதி வேட்டைத் திருவிழாவும் 29ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 30ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

# வடமராட்சியில் இரவு நேரங்களில் திருடர்களின் நடமாட்டம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்20

வடமராட்சிப் பகுதியில் இரவு நேரங்களில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இரவு நேரத்தில் அமுல்படுத்தப்படும் மின்வெட்டை சாதகமாகப் பயன்படுத்தி திருடர்கள் நடமாடி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் மின் விநியோகம் தடைப்பட்டிருந்த நேரம் கரணவாய் பிரதேசத்தில் ஒரு பகுதியிலிருந்து கூக்குரல் கேட்டது. அப்பகுதியை நோக்கி ஆண்கள் கூட்டமாகச் சென்றனர். அந்தநேரம் மற்றொரு பகுதியில் தனித்திருந்த பெண்ணின் 3 பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலியைத் திருடர்கள் அறுத்துக் கொண்டு ஓடியதாகக் கூறப்படுகின்றது.

இதேபோல் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கரணவாய், சோளங்கன் பகுதியில் வீட்டிலிருந்தவரைத் தாக்கிவிட்டு பெண்ணின் தாலிக்கொடியைத் திருடர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.


சில பகுதிகளில் நகைகளுடன் பெறுமதியான பல பொருள்களும் திருடப்பட்டுள்ளன. (202-155)

## சிரமதானம்

சுழிபுரம்,ஜூன்20

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய வீதிகள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தின் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு ஆலய தொண்டர் சபை உறுப்பினர்கள் வீதிகளைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து செப்பனிட்டுள்ளனர். (202-28)




# நீர்வேலியில் இராணுவ வைத்தியர்கள் இலவச மருத்துவ முகாம் நடத்தினர்

நீர்வேலி கிராம மக்களின் நலன் கருதி இராணுவ வைத்தியர்கள் குழுவினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். அத்தியார் இந்துக் கல்லூரியில் மருத்துவமுகாம் ஒன்று நடத்தப்பட்டது.

பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இக்கிராமத்தில் வாழும் பலர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள். இதனால் முறையான மருத்துவக் கவனிப்பின்றியும் போக்குவரத்து வசதி இன்றியும் உள்ளனர். இங்குள்ள சிறுவர்கள் பலருக்கு தோல் வியாதி, சளி, வயிற்றோட்டம், பற்சுகாதாரமின்மை போன்ற நோய்களும் போஷாக்கின்மையும் காணப்படுகின்றன.

இந்நிலையைக் கருத்தில் கொண்டு யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் ஆலோசனையின் பேரில் பலாலி இராணுவ மருத்துவமனை வைத்தியக் குழு இலவச மருத்துவமுகாமை நீர்வேலியில் நடத்தியது.

இம்முகாமில் 350 இற்கும் மேற்பட்ட மக்கள் பங்குபற்றிச் சிகிச்சை பெற்றனர் - என்றுள்ளது. (202)

# மாவட்ட மட்டத்தில் உயர்தர மாணவருக்கு 25ஆம் திகதிமுதல் முன்னோடிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஜூன்20

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு எதிர்வரும்25ஆம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு யாழ்.மாவட்ட மட்டத்தில் முன்னோடிப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

சகல விஞ்ஞானப் பிரிவு மாணவர்களையும் தமது பாடசாலைகளில் இப்பரீட்சைக்குத் தவறாது தோற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

பாடசாலைகள் பரீட்சை வினாத்தாள் பொதிகளை தத்தமது வலயக் கல்வி அலுவலகங்களில் பெற்று பரீட்சைகளை நடத்த முடியும்.

பரீட்சையின் இறுதியில் மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்கள் தொடர்பாக பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் புள்ளி பகுப்பாய்வினை உரிய வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சை மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ளது.

பரீட்சை இடம்பெறவுள்ள நேர அட்டவணை வருமாறு:-

| திகதி | நேரம் | பாடம் | நேரம் | பாடம் |
|---|---|---|---|---|
| 2007.06.25 திங்கள் | 9.00 -12.00 | பௌதிகவியல் 11 | 1.00-3.00 | பௌதிகவியல் 1 |
| 2007.06.26 செவ்வாய் | 9.00 -12.00 | இரசயானவியல் 11 | 1.00-3.00 | இரசயானவியல் 1 |
| 2007.06.27 செவ்வாய் | 9.00 -12.00 | உயிரியல் 11 | 1.00-3.00 | உயிரியல் 1 |
| | 9.00 -12.00 | இணைந்த கணிதம் 1 | 1.00-4.00 | இணைந்த கணிதம் 11 |

# தபாலக வருமானத்தை அதிகரிக்கும் வழிமுறைகள் குறித்து கலந்துரையாடல்

குடாநாட்டில் இயங்கும் தபாலகங்களின் வருமானங்களை அதிகரிக்கும் வழிமுறைகள் தொடர்பாக சகல உபதபாலக அதிபர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் ஆராயும் கலந்துரையாடல் இன்று யாழ்.பிரதம தபாலகத்தில் இடம்பெறவுள்ளது.

ஊழியர்களுக்கான சம்பளம், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் தபாலகங்கள் இயங்கும் கட்டடங்களுக்கான வாடகை போன்றவற்றை வழங்குவதற்கு மாதாந்தம் 70 மில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக 82 மில்லியன் ரூபாவை மாத வருமான இலக்காகக் கொண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அந்த இலக்கு இதுவரை எட்டப்படவில்லை.

ஆகவே, இத்திட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பாகவும் அவற்றைச் செயற்படுத்தி வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் இன்றைய கலந்துரையாடலின்போது விளக்கமளிக்கப்படவுள்ளதாக வட வலயப் பிரதித் தபால்மா அதிபர் வி.குமரகுரு தெரிவித்துள்ளார். (1-203)

# வலிகாமம் வடக்கு பிரதேச வீதிகள் சில 50 வருடங்களாகத் திருத்தப்படவில்லை!

யாழ்ப்பாணம்,ஜூன்20

வலி.வடக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பங்களா வீதி, கல்லாரை வீதி மற்றும் வெள்ள வாய்க்கால் வீதி என்பன கடந்த 50 வருடங்களாகத் திருத்தம் செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஐம்பது வருடங்களுக்கு மேலாக இந்த வீதிகளுக்கு தார் ஊற்றப்படாமல் கைவிடப்பட்டுள்ளன. தற்போது அடிக்கடி காங்கேசன்துறை வீதி போக்குவரத்திற்கு தடை செய்யப்படும் சந்தர்ப்பங்களில், நாளாந்தம் புல நூற்றுக்கணக்கான மக்கள் இந்த வீதிகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

சிறிய வீதிகள், ஒழுங்கைகள் என்பனவும் தார்போட்டு திருத்தங்கள் செய்யப்படுகின்றன. எனினும் இந்த குறிப்பிட்ட வீதிகள் பல காலமாகத் திருத்தப்படவில்லையெனச் சுட்டிக்காட்டி ஐயனார் சனசமூக நிலையம், வலி.வடக்கு பிரதேச சபை செயலாளரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

வலி.வடக்குப் பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உட்பட பலருக்கும் அம்மகஜரின் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (202-68)

## தம்பசிட்டி கதிரைவேற்பிள்ளை சிக்கன க.கூ. சங்கத்தால்

# மாணவர்கள், முதியோர், சமூக சேவையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்20

தம்பசிட்டி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 7 மாணவர்கள், 9 முதியோர்கள், ஒரு சமூக சேவையாளர் ஆகியோரைக் கௌரவித்துள்ளது.

சங்கத்தின் 19ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதன்போதே இக்கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது.

சட்டத்தரணி ந.தங்கராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் எஸ்.சிவசுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் மு.சிவநேசனும் கலந்துகொண்டனர்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளான [illegible] பிரசன்னா, இ.பிரதீப் (தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை மாணவர்கள்), அ.ஜெயவதனா, இ.கோகுலவதனா (மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவிகள்), பா.மயூரி, செ.சிந்துராணி (வட இந்து மகளிர் பாடசாலை மாணவிகள்) ஆகியோரும் -

சங்க அங்கத்தவர்களில் முதியவர்களான திருமதி இந்திரா வீரவாகு, திருமதி பா.சீவரத்தினம், திருமதி செ.பாக்கியம், செல்வி ஆ. இராசம்மா, செ.அருளம்பலம், வே.கந்தசாமி, கா.கணேசமூர்த்தி, வே.கார்த்திகேசு, கி.சிவகுருநாதன் ஆகியோரும்-

தம்பசிட்டி கிராமத்தில் இவ்வாண்டுக்கான சிறந்த சமூக சேவையாளராகத் தெரிவான திருமதி பொ.இரத்தினசோதியும் கௌரவிக்கப்பட்டனர்.

சிறந்த சமூக சேவையாளராகத் தெரிவு செய்யப்பட்டவருக்கு அமரர் வே. மார்க்கண்டேயபிள்ளை விருது வழங்கப்பட்டது. (202-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



வீதி அபிவிருத்தி அதிகார சபையின்
பருத்தித்துறைப்பிரிவில் கடமையாறும்
**க.பாலசுப்பிரமணியம்** அவர்களின் அன்பு மனைவி
திருமதி
**பாலசுப்பிரமணியம் இராசேஸ்வரி**

மலர்வு 22-12-1950 — உதிர்வு 22-05-2007

அன்பாலே எமையெல்லாம் அணைத்து நின்று
அகிலமதில் பாசமழை பொழிந்து நின்றாய்
இன்பமுடன் நமையெலாம் இணைத்தே என்றும்
ஏற்றமுடை வாழ்வினை வாழ்ந்து நின்றாய்
என்புருகும் பிணைப்பான பாலு தன்னை
எடுத்தலறி கதறவிட்டு எங்கு சென்றாய்!
நின்னிழப்பை தாங்காது கதறுகின்றோம்
நின்னாத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிறைவேற்றுப் பொறியியலாளரும், உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பருத்தித்துறை.
(61787)

---


புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 25/06/2007 - 9.00 AM

சர்வதேசரீதியில் (இலங்கையிலும்) முன்னணியிலுள்ள Accounting Software களினூடாக Company Accounts இனையும் உள்ளடக்கி

3Months **Diploma in Computerized Accounting**
**ACCPAC + Quick Books Premier + MYOB**

Course Contents
❖ Manual Accounting
❖ Financial Accounting
❖ Cost Accounting
❖ Taxation (Including VAT)
❖ Stock Control
❖ Bank Reconciliation
❖ Budgeting

வகுப்புக்கள் ஆரம்பம்:
Batch I : 23/06/2007
Batch II : 24/06/2007
Batch III : 25/06/2007
Batch IV: 28/06/2007


---


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
**ரோயல் குளுக்கோஸ்**
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!
PACKED BY:
**ROYAL** Industries Colombo 12
☎: 0112334603
அனைத்துப் பாமசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567


---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 19 - 10 - 1924



ஆண்டவன் அடியில் 01 - 07 - 2006

**அமரர் பொன்னையா தெய்வேந்திரம்**
(பத்தர்)
*திதி: அபரபட்ஷ ஷஷ்டி (20.06.2007)*

ஆண்டொன்று சென்றது ஐயா
ஆறவில்லை எம் துயரம்
அவனியில் நாம் வாழ வழிகாட்டிய தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன?
அவைகள் அனைத்தும் உங்கள்
அன்புக்கு ஈடாகுமா?
ஆண்டு ஒன்றென்ன? பல சென்றாலும்
எங்கள் விழிகளில் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் இனிய முகம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
அனுதினம் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*பிளாக் வீதி, சங்கானை.*
(61773)

---

## 11ஆம் ஆண்டு நினைவு நாள்

அன்னை மடியில் 09 - 01 - 1971



அரக்கர் பிடியில் 06 - 06 - 1996

அமரர்
**கதிரன் கனகலிங்கம்**

எம் உறவே
உயிருள்ளவரை உனை மறவோம்.

உன் நினைவுகளுடன்:
**க.சஞ்சிவன்**
(சகோதரன்)

*கைதடி மத்தி, குமரநகர்.*
(61776)

---



சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம்
**ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தான**
*திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2007*

விநாயக அடியார்களே!

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருஷம் ஆனிமாதம் 7ஆம் நாள் 21.06.2007 வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

பெருவிழாப் பொலிவு

| | |
|---|---|
| கொடியேற்றம் : | ஆனி 7ஆம் நாள் (21.06.2007) வியாழக்கிழமை மு.ப 10.30 மணி. |
| சப்பரம்: | ஆனி 14ம் நாள் (28.06.2007) வியாழக்கிழமை பிற்பகல் 4மணி |
| இரதோற்சவம் : | ஆனி 15ம் நாள் (29.06.2007) வெள்ளிக்கிழமை மு.ப10.15மணி |
| பூங்காவனம் : | ஆனி 17ம் நாள் (01.07.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி |
| பிராயச்சித்த அபிசேகம் : | ஆனி 18ம் நாள் (02.07.2007) திங்கட்கிழமை காலை 9மணி |
| வைரவ சாந்தி : | ஆனி 18ம் நாள் (02.07.2007) திங்கட்கிழமை பிற்பகல் 2மணி. |
| பிரதமகுரு : | "வேதாகம தத்துவநிதி" ஸ்ரீவிஸ்ணு ஸ்ரீ க.ச சோமாஸ்கந்தக் குருக்கள் |
| ஆலயகுரு : | பிரம்மஸ்ரீ.இ.தேவாலசர்மா |

தேவஸ்தான பரிபாலனசபை
(61731)

---

## 19 ஆம் மாத நினைவு நாள்



அமரர்
**இரத்தினசாமி செல்வநாதன்**
(செல்வம்)
திதி: 20.06.2007

**மலர்வு: 12.04.1953** — **உதிர்வு: 21.11.2005**

*அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:
**செ.ரூபகுமாரி** *(மனைவி -பிரான்ஸ்).*

V.M.Road,
Point pedro.
T.P.No.: 033614144337
(61677) சி.சிவபாலசுந்தரம் (பபி C.E.B) p.p

---


**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**
**THE JAFFNA EDUCATION CENTRE**
(நாதன்ஸ் திரையரங்குக்கு முன்பாக மேல்மாடியில்)
Spoken English with Grammar, "சிங்களம்"
Short hand Typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன. பாட முடிவில் 'சான்றிதழ்' வழங்கப்படும்.
**புதிய பிரிவு ஆரம்பம்: 23-06-2007**
இயக்குநர்:- இ.லோகநாயகி
(61792)


---

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர் **கணேசபிள்ளை பரமேஸ்வரி**

மலர்வு 27-12-1937 — உதிர்வு 01-07-2006

அன்னையே உமைப் பிரிந்து ஆண்டொன்று
ஆனாலும் நம் மனம் ஆறவில்லை
எங்கும் எதிலும் நிறைந்து விளங்கும் உம்மை
நாம் தான் மறந்திட முடியுமா?
*உம் ஆத்ம சாந்தியை வேண்டிப் பிரார்த்தனை செய்கின்றோம்.*

குடும்பத்தினர்.

*மூளாய் மத்தி, சுழிபுரம்.*
(61782)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் **கந்தன் கணபதி**

தோற்றம் 08-02-1949 — மறைவு 07-05-2007



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் கணபதி கடந்த 07.05.2007 அன்று சிவபதமெய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (20-06-2007) புதன்கிழமை நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*புத்தூர் மேற்கு,*
*வாதரவத்தை அம்மன் வீதி, புத்தூர்.* (61780)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை

ஆக்கம்: கல்விச்சுடர் ஆசிரியர் குழு

நேரம்: 1மணி 15 நிமிடம்

### வினாத்தாள் II

**01. கீழ்வரும் பந்தியை நன்கு வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.**

மழை தொடர்ந்து பொழிந்தது. வெள்ளம் எங்கும் பெருக்கெடுத்து ஓடியது. பள்ளமான இடங்களும் குளங்களும் வயல்வெளிகளும் கடல் போலக் காட்சி அளித்தன. வயல்களில் உயர்ந்த வரம்புகளைத் தழுவிக்கொண்டு வெள்ளம் அலைமோதியது. சில வயல்களில் நெற்பயிர்கள் வெள்ளத்தின்மேல் தலைநிமிர்ந்து நின்று ஆனந்தக் கூத்தாடியன. சில வயல்களில் நெற்பயிர்களை மூடி வெள்ளம் நின்றது. நெற்பயிர்கள் வெள்ளத்தின் மேல் வளர்ந்து பச்சைப் பசேல் எனக் காட்சியளித்தது. வயல்களின் வரம்புகளில் செங்கால் நாரைகளும் வெண் கொக்குகளும் கூட்டம் கூட்டமாய்க் காணப்பட்டன. அரவங்கேட்டதும் வெண்ணிறச் சிறகுகளை விரித்து வானவெளியிற் பறந்தன. எழில் நிறைந்த அந்தக் காட்சி பார்ப்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும். உழவர்களில் சிலர் மண்வெட்டியால் உடைப்பெடுத்த வரம்புகளை அடைத்தனர். தத்தம் வயல்களைப் பார்த்து மகிழ்ந்தனர். சில வயல்களில் பெண்கள் வரிசையாக நின்று களை எடுத்தனர். வயல்களின் நடுவே சிறுசிறு குளங்கள் இருந்தன. அவை நீர் நிறைந்து காணப்பட்டன. பச்சைக் கம்பளத்திலே பதித்த நீலமணிகள் போலத் தோன்றின. அக்குளங்களிலே தாமரையும் அல்லியும் நீர் மட்டத்திற்கு உயர்ந்து ஊஞ்சலாடிக் கொண்டிருந்தன. வயல்வெளி முடிவிலுள்ள மடைவழியாக மேலதிக வெள்ளம் குபுகுபு எனப் பாய்ந்து கொண்டிருந்தது.

1) தரப்பட்ட பந்திக்குப் பொருத்தமான தலைப்பை எழுதுக.
..........
2) வயல்களில் நின்ற பெண்கள் செய்த வேலை யாது?
..........
3) பந்தியில் குறிப்பிடப்பட்ட உவமைத் தொடரை எழுதுக.
..........
4) "வயல்" என்பதன் ஒத்த கருத்துச் சொல் யாது?
..........
5) "நிமிர்ந்து" என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக.
..........
6) கீழே தரப்பட்டுள்ள பகுதியில் உள்ள அடைமொழியின் கீழ்க் கீறிடுக.
**வயல்களில் உயர்ந்த வரம்புகளைத் தழுவிக்கொண்டு வெள்ளம் அலைமோதியது.**
7) பந்தியில் உள்ள அஃறிணைப் படர்க்கைப் பன்மை இறந்த கால வினைச் சொல் யாது?
..........
8) பந்தியில் உள்ள அடுக்குமொழியை எழுதுக.
..........
9) எழுவாய்ச் சொல்லின் கீழ்க் கீறிடுக.
**வயல்களில் நெற்பயிர்கள் வெள்ளத்தின் மேல் தலைநிமிர்ந்து நின்று ஆனந்தக் கூத்தாடின.**
10) பந்தியில் உள்ள இரட்டைக் கிளவியை எழுதுக.
..........
11) எழில் நிறைந்த என்பதன் கருத்து
..........
12) பச்சைக் கம்பளத்தில் நீலமணிகள் போலத் தோன்றியவை யாவை?
..........

**02. கீழே நான்கு நிரல்களில் சொற்கள் தரப்பட்டுள்ளன. ஒரு வாக்கியத்தை அமைப்பதற்கு ஒவ்வொரு நிரலிலும் உள்ள ஒவ்வொரு சொற்களை எடுத்தல் வேண்டும். ஒரு வாக்கியமானது நான்கு சொற்களைக் கொண்டிருக்கும் வண்ணம் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக.**

| நிரல்-1 | நிரல்-2 | நிரல்-3 | நிரல்-4 |
|---|---|---|---|
| கப்பல் | அழகாக | அன்பு | வீசும் |
| மயில் | மாலையில் | பயணம் | ஆடும் |
| மல்லிகை | கடலில் | மணம் | பிடிக்கும் |
| பூனை | சத்துள்ள | நடனம் | செய்யும் |

1) ..........
2) ..........
3) ..........

**03. கீழே தரப்பட்ட வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளைஎழுதுக.**
1) அண்ணா அண்ணா மின்குமிழ்களைக் கண்டுபிடித்தவர் யார்
2) மா பலா வாழை என்பன முக்கனிகளாகும்

**04. கீழ் உள்ள சொற்குறுக்கங்களால் குறிப்பிடப்படுவதை எழுதுங்கள்.**
1) கூ.மொ.வி.நி ..........
2) ம.ப.பா ..........

**05. சரியான சொல்லின் கீழ்க் கீறிடுக.**
1) அன்னாசிப்பழத்துண்டுகள், அன்னாசிப்பளத்துண்டுகள், அன்னாசிப்பலத்துண்டுகள், அந்நாசிப்பழத்துண்டுகள்
2) சறனாலயம், சரணாலயம், சரணாளயம், சரண்ணாலயம்

**06. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.**
1) தயவு செய்து என்னை மன்னியுங்கள் ..........
2) சந்தோசமான பிறந்தநாள் ..........
3) நீங்கள் எங்கே வசிக்கின்றீர்கள்? ..........

**07. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**
1) Boat .......... 2) Feet ..........
3) Shop .......... 4) Thursday ..........

**08. பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**
1) கிரவா கொள பா(ட்)டாய் ..........
2) மே மகே பன்சல ..........
3) மேயா மகே சீயா ..........
4) புஞ்சி மல்லி ..........

**09. பின்வரும் அலகுகள் எப்பிராணிகளை யாக எனக் கெரிக்கு எழுதுக.**
(கிளி, மீன்கொத்தி, பருந்து, தேன்குருவி, மரங்கொத்தி, காகம், புறா, மைனா)




1) .......... 2) .......... 3) .......... 4) .......... 5) ..........

**10. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**
1) நீரில் கரையும் பொருள் அல்லாதது
1. உப்பு 2. உரம் 3. மெழுகு 4. எலுமிச்சஞ்சாறு


2) தேசியக் கொடியில் A,B,C,D எனக் குறிக்கப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் நிறங்கள் முறையே
1. சிவப்பு, பச்சை, வெள்ளை, மஞ்சள்
2. பச்சை, சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள்
3. பச்சை, மஞ்சள், சிவப்பு, செம்மஞ்சள்
4. சிவப்பு, பச்சை, மஞ்சள், செம்மஞ்சள்

3) தரப்பட்ட படத்திலுள்ள சம்பவங்கள் எதனுடன் தொடர்புபட்டன
1. இரவு தோன்றப் போவதன் அறிகுறிகள்
2. மழை வருமுன் தோன்றும் அறிகுறிகள்
3. காலை புலரப்போவதன் அறிகுறிகள்
4. வெள்ளம் வரப்போவதன் அறிகுறிகள்

4) பின்வருவனவற்றில் சரியான நடத்தல் முறையைக் காட்டுவது எது?



1. 2. 3. 4.

5) 
இந்த உடுக்கோலத்தின் பெயர் யாது?
1. பெருநாய் 2. சிறுகரடி
3. கார்த்திகை 4. வேட்டைக்காரன்

6) அணிநடையின் போது "இலகுவாய் நில்" என்ற கட்டளையின் போது முதலில் தூக்கி வைக்க வேண்டிய கால் எது?
1. வலதுகால் 2. இடதுகால்
3. இரண்டுகால்களும் 4. இரண்டில்ஒன்று

7) கீழே தரப்பட்ட எந்த செயற்பாட்டின் போது சாய்தளம் பயன்படுகிறது



(1) (2) (3) (4)

8) தேசிய அடையாள அட்டை வழங்கும் திணைக்களம் யாது?
1. அஞ்சல் திணைக்களம் 2. கல்வித் திணைக்களம்
3. ஆட்பதிவுத் திணைக்களம் 4. புள்ளிவிபரத் திணைக்களம்


9) பின்வரும் தாவரங்களில் எது ஆடாதோடை எனும் தாவரம்



(1) (2) (3) (4)

10) இலங்கையின் மிக நீளமான ஆறு எந்த இடத்தில் கடலில் கலக்கிறது
1. கொழும்பு 2. கண்டி
3. திருகோணமலை 4. அம்பாந்தோட்டை

**11. நாடா ஒலிப்பதிவு கருவி ஒன்றின் ஆளிகள் அமைந்துள்ள பகுதியின் படம் தரப்பட்டுள்ளது. இந்த ஆளிகள் ஒவ்வொன்றினதும் பயன்பாட்டைத் தெரிந்து எழுதுக.**
(முன்நோக்கிச் சுற்றல், பதிவு செய்தல், ஒலிக்கச் செய்தல், சிறிது நேரம் நிறுத்தல்)



1) .......... 2) ..........
3) .......... 4) ..........


**12. படத்தில் காட்டப்பட்ட பொருட்களின் பெயர்களை எழுதுக. அவற்றை ஆக்குவதற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் யாவை?**

1) 
பெயர்: ..........
மூலப்பொருள்: ..........

2) 
பெயர்: ..........
மூலப்பொருள்: ..........

**13. சில வித்துக்களின் படங்கள் A,B எனக் குறிக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பாகப் பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

| | வித்தின் பெயர் | பரம்பலடையும் முறை |
|---|---|---|
| A | .......... | .......... |
| B | .......... | .......... |




**14. சரியான விடையை எழுதுக.**
1) ஒரு பரீட்சைக்கு 889 பேர் விண்ணப்பித்தனர். அவர்களுள் 37 பேர் பரீட்சை எழுதவில்லை. 377 பேர் சித்தியடைந்தனர்.
A) பரீட்சை எழுதியோர் எத்தனை பேர்?
..........
B) பரீட்சையில் சித்தியடைந்தோர் எத்தனை பேர்?
..........
C) பரீட்சைக்குத் தோற்றாதவர்களையும் பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களையும் சேர்த்தால் எத்தனை பேர் மீண்டும் பரீட்சைக்குத் தோற்றமுடியும்?
..........

2) தென்னந்தோப்பு ஒன்றிலிருந்து 978 தேங்காய்கள் பறிக்கப்பட்டன. அவற்றுள் 365 தேங்காய்கள் விற்கப்பட்டன. 234 தேங்காய்கள் சந்தைக்கு கொண்டு செல்லப்பட்டன. 52 தேங்காய்களை தோப்புச் சொந்தக்காரர் வியாபாரி ஒருவருக்கு கடனுக்குக் கொடுத்தார்.
A) மிகுதியாக இருக்கும் தேங்காய்கள் எத்தனை?
..........
B) காசுக்குவிற்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கைக்கும் சந்தைக்கு கொண்டு செல்லப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?
..........
C) காசுக்கும் கடனுக்கும் விற்கப்பட்ட தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை யாது?
..........

**15. பின்வரும் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**
1) நடந்து பிரயாணம் செய்யும் ஒருவர் 1மணித்தியாலம்4km தூரம் பயணம்செய்வார். அவர் 15 நிமிடங்களில் செல்லக்கூடிய தூரம் எவ்வளவு?
..........
2) 20 பிஸ்கட்டுக்களின் நிறை 100g ஆகும். ஒரு பெரிய பிஸ்கட் பெட்டியில் 2 kg பிஸ்கட்டுக்கள் இருந்தன எனின் அப்பெட்டியில் இருந்த பிஸ்கட்டுக்கள் எத்தனை?
..........
3) பெரிய பாத்திரம் ஒன்றில் இருந்த பால் முழுவதும் ஒவ்வொன்றும் 750ml கொள்ளும் 4 போத்தல்களிலும் 500ml கொள்ளும் 3 போத்தல்களிலும் 250ml கொள்ளும் 4 போத்தல்களிலும் ஊற்றி நிரப்பப்பட்டது எனின் பெரிய பாத்திரத்தில் இருந்த பாலின் அளவை l,ml இல் தருக.
..........
4) 10m 30cm நீளமும் 6m 20cm அகலமும் உடைய ஒரு காணித்துண்டின் சுற்றளவு யாது?
..........
5) 1kg மிளகாயின் விலை ரூபா 150 ஆகும். 150g மிளகாயின் விலை யாது?
..........

**16. விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் கடை ஒன்றில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது.**

| பொருள் | ஒன்றின் விலை | விற்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| விளையாட்டு மைதானம் | ரூபா 60 | 12 |
| அசையும் பொம்மை | ரூபா 145 | 3 |
| சிறிய பொம்மை | ரூபா 35 | 15 |
| விளையாட்டுக் கார் | ரூபா 75 | 21 |
| ஊதி | ரூபா 25 | 10 |

1) குறிப்பிட்ட தினத்தில் விற்கப்பட்ட விளையாட்டுப் பொருட்களின் மொத்த எண்ணிக்கை யாது?
..........
2) அன்றைய தினம் அசையும் பொம்மைகளின் விற்பனையால் கிடைத்த பணம் எவ்வளவு?
..........
3) அப்பணம் ஊதி விற்பனையால் கிடைத்த பணத்தைவிட எவ்வளவால் அதிகமானது?
..........
4) எந்தப் பொருள் விற்பனையால் குறைந்தளவு பணம் கிடைத்தது?
..........
5) ஒவ்வொரு விளையாட்டுப் பொருளிலும் ஒவ்வொன்றை வாங்கச் செலவாகும் மொத்தப் பணம் எவ்வளவு?
..........

**17. நான் எனது அப்பாவுடன் மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்றேன். அங்கே கூண்டில் அடைக்கப்பட்ட பயங்கர மிருகமான புலி கூண்டைவிட்டு வெளியேவந்துவிட்டது. அப்போது இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதுக. சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.**

1. ..........
2. ..........
3. ..........
4. ..........
5. ..........
6. ..........

(முற்றும்)

## மாணவர்களே!/பெற்றோர்களே!

எமது பத்திரிகையில் உங்களுக்காக வெளிவரும் "கல்விச்சுடர்" பகுதி பற்றிய உங்கள் கருத்துக்களையும் எதிர்பார்ப்புக்களையும் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கவும். நீங்கள் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
கல்விச்சுடர், "உதயன்"
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0714273035
E-mail: kalvisudar@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




பிரபாகரன் - சுஜித்தா தம்பதியரின்
செல்வப்புதல்வன் **அக்சயன்**
தனது பிறந்த நாளை இன்று (20-06-2007) புதன்கிழமை
தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக்
கொண்டாடுகின்றார். அவரை அப்பா, அம்மா, பாட்டன்,
பாட்டி, அப்பப்பா, அப்பம்மா, கொழும்பில் வசிக்கும்
தாத்தா, அம்மம்மா, மாமாமார், கனடாவில் வசிக்கும்
பெரியமாமா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, தம்பி,
அத்தை மாமா, மச்சி, அத்தான் மற்றும் உற்றார்,
உறவினர் அனைவரும் பல்கலையும் பெற்றுப்
பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

சந்தைபாடி, உடுப்பிட்டி. **அப்பா, அம்மா.**

(61751)



## சிறீமுருகன் நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்
போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)

தொடர்பு: நட்ணன்
சோமசுந்தரம் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777-903090
0777 246117


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சின்னத்தம்பி பாறுபதி**

திதி: சஷ்டி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 05*04*1927 | 01*07*2006 |

அன்பின் உறைவிடமே
பாசத்தின் பிறப்பிடமே
உம் இனிய வதனமுகமும்
நினைவுகளும்
எம்மை விட்டு என்றுமே நீங்காதம்மா!

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. (சி/52707)

உம் நினைவுடன்:
வடிவேலு தவமணி குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பு



**அமரர் சாம்பசிவம் சேவல்கொடியோன்**

(ஓய்வுபெற்ற அதிபர், தரம்-1)

| மலர்வு | மறைவு |
| --- | --- |
| 30*03*1930 | 22*05*2007 |

நாளை (21-06-2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்பு டன் கேட்டுக்கொள்கின்றோம்.

வேம்படி,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்,
உதயகுமார் துரைராஜ் (ராசு).

(61791)



## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், தொண்டைமானாறு

**சகஸ்ர (1008) மகா சங்காபிஷேகமும்**
**ஆனி உத்தரத் திருவிழாவும்**

முருகப்பெருமான் அடியார்களே!

நிகழும் சர்வசித்து வருடம் ஆனி 8ஆம் நாள்
22-06-2007 அன்று வெள்ளிக்கிழமை
காலை 5 மணிக்கு சங்குப்பூசை
காலை 8 மணிக்கு சங்காபிஷேகம்
முற்பகல் 11 மணிக்கு சண்முக அர்ச்சனை
மதியம் 12 மணிக்கு ஆனி உத்தரத் திருவிழாவும்
பிற்பகல் ஒரு மணிக்கு அன்னதானமும் நடைபெறும்.

அன்று நாதஸ்வர வித்துவான் S. சுப்பிரமணியம் விபிசணன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெறும்.

உபயம்:-
பொன்னம்பலம் குடும்பம், ஜெகநீசன் குடும்பம் - சங்கத்தானை, சாவகச்சேரி.
சிவஞானம் குடும்பம், மனோராஜ் குடும்பம் - சங்கத்தானை, சாவகச்சேரி.

ஆலயப் பிரதம பூசகர்,
தருமரெத்தின ஐயர் மகேந்திரன் ஐயர்.

(சி/52702)

## ஒத்துமாறல்

கண்டி தேசிய பாடசாலையில் கற்பிக்கும் கணிதபாட ஆசிரியை (கல்வியியல் கல்லூரி) யாழ். மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார். விரும்புபவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**021 226 3070**
**(வல்வெட்டி)**

(சி/52693)

## கடந்த 13.06.2007 வெளியான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரிவினாத்தாள் - 11 இற்கான விடைகள்.

1)
1. நிகழ்காலம்.
2. 1) ஆழி. 2) ஓரம்.
3. 1) ஆரவாரம்/சத்தம். 2) தோன்றி.
4. சிறுவர்கள்.
5. மெல்லமெல்ல/கூட்டங்கூட்டமாக.
6. சிறுவர்கள்/பெற்றோர்கள்.
7. தகாத காலத்தைக் கழிக்க. எதிரிகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு. இனப்பெருக்கம் செய்வதற்கு. உணவைச் சேமிப்பதற்கு.
8. பெற்றோர்.

2)
1. பெயரெச்சம். 2. வினையெச்சம்.
3. வினையெச்சம்.

3)
1. தாள். 2. பாகன். 3.சாரதி.
4. யானை. 5.சாணம்.

4)
1. சுயசரிதை. 2.தற்கொலை.

5)
1. சரி. 2. பிழை. 3.பிழை.
4. சரி. 5. சரி.

6)
1. கார்த்திகைப்பூ.
2. காசித்தும்பை. 3.அகத்தி.
4. பிறைப்பூ. 5.ஓகிட்.

7)
1. கிறுக்கல் சித்திரம்.
2. சோம் தையல். 3.மின் தூக்கி.
4. பாரம் சாம்பி. 5. லூயி பாஸ்டர்.

8) 1.எங்கள் வீட்டில் மணிக்கூடு உண்டு. 2.பேசுங்கள்.

9) 1.Beach. 2.Children. 3.Sun.

10) 1. இன்று. 2.பறவைகள்.

11) 1) 2 2) 4 3) 3 4) 3 5) 1 6) 2 7) 1 8) 2 9) 4 10) 2 11) 1

12) 1) 30cm. 2) viii, ix, xii, xiv, xxx.
3) ரூபா 50
4) ஞாயிற்றுக்கிழமை.
5) 48 வருடங்கள்.
6) 27 7) 3 8) 0
9) 6 முகங்கள் உண்டு. 8 உச்சிகள் உண்டு. 12 விளிம்புகள் உண்டு.

13) 1) யாரும் இல்லை. 2) 210. 3) மாம்பழம். 4) 200. 5. 10.

14) பொருத்தமான 6 வசனங்கள்.


## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By.ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426, (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.

(61955) "THE ROYAL IS THE BEST"


## மணமகள் தேவை

1973ஆம் ஆண்டு செவ்வாய்க் குற்றமற்ற பிரான்சில் குடியுரிமையுள்ள மணமகனுக்கு பிரான்சில் குடியுரிமையுள்ள/ குடியுரிமையற்ற மணமகள் தேவை. ஏனைய நாடுகளும் பரிசீலிக்கப்படும்.

துர்க்கா திருமண சேவை
இல.09, சங்கிலியன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(61798) தொ.பே.0214591417

## கண்ணீர் அஞ்சலி



**தம்பிஐயா தங்கவேல்**

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட வருமானவரி உத்தியோகத்தர்)

அவர்கள்16-06-2007 சனிக்கிழமை சிவ பதம் அடைந்தமையையிட்டு, எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவர்கள் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்வதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்:
டாக்டர் க.ரகுராம்குடும்பம்,
உரும்பிராய்.

(சி/52708)



## கொக்குவில் நந்தாவில்
## கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய
## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

ஆனி 6ஆம் நாள் 20.06.2007 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம்

ஆனி 8ஆம் நாள் 22.06.2007 வெள்ளிக்கிழமை மஞ்சத் திருவிழா பிற்பகல் 3.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் மஞ்சத்தில் திருவிதியுலா

ஆனி 12ஆம் நாள் 26.06.2007 செவ்வாய்க்கிழமை கைலாய வாகனத் திருவிழா, பிற்பகல் 3.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் கையலாய வாகனத்தில் திருவீதியுலா

ஆனி 14ஆம் நாள் 28.06.2007 வியாழக்கிழமை சப்பரத் திருவிழா, பிற்பகல் 3.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் சப்பரத்தில் திருவிதியுலா

ஆனி 15ஆம் நாள் 29.06.2007 வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா, காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து இரதோற்சவம் நடைபெறும்.

ஆனி 16ஆம் நாள் 30.06.2007 சனிக்கிழமை தீர்த்தோற்சவம் அதிகாலை 5 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

*குறிப்பு: மகோற்சவ நாள்களில் தினமும் அன்னதானம் வழங்கப்படும்.*

கொக்குவில், நந்தாவில்.

கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள்
ஆலய பரிபாலன சபையினர்.

(61797)


## COMPUTER EXPRESS
### INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

## மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 80% off

| | | |
| --- | --- | --- |
| Diploma in Computer Science<br>4 Months<br>~~7,000~~ 1,400 | Honours Diploma in Computer Science<br>5 Months<br>~~9,000~~ 1,800 | Diploma in Web page Designing<br>4 Months<br>~~7,000~~ 1,400 |
| Diploma in Graphic Desining<br>4 Months<br>~~7,000~~ 1,400 | Diploma in Desktop Publishing<br>4 Months<br>~~6,000~~ 1,200 | Diploma in Hardware Engineering<br>3 Months<br>~~6,000~~ 1,200 |
| Diploma in Auto CAD<br>3 Months<br>~~6,000~~ 1,200 | Diploma in Microsoft Office<br>3 Months<br>750 | Accounting Package<br>3 Months<br>~~7,000~~ 1,400 |

### 50% Off ADVANCE COURSES

| | | |
| --- | --- | --- |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2,500 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 22/06/2007
Batch II : 23/06/2007
Batch III : 24/06/2007
Batch IV : 29/06/2007

June 30 ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தமிழர்களின் தனித்துவ உரிமைகளை ஏற்காத தீர்வினால் பயனே இல்லை

*''நாட்டின் ஆட்சி அதிகாரத்தை மாவட்ட மட்டத்திலேயே பகிர்ந்தளிக்கலாம் என்ற தனது நிலைப்பாட்டில் இருந்து பிரதான ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விட்டுக்கொடுத்து இறங்க வேண்டும். பெரும்பாலான கட்சிகள் முன்வைத்துள்ள - மாகாண மட்ட அதிகாரப் பரவலாக்கல் - திட்டத்தை அக்கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காணும் முயற்சி முறிந்துபோகும்.''*

இப்படித் தெரிவித்திருக்கின்றார், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனைகளை முன்வைப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருமே தீர்வைக் கொண்டு வருவதற்கு அச்சாணியாகத் திகழ வேண்டியவர்கள் என்று சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் திஸ்ஸ விதாரண, அத்தகைய பொறுப்பை சம்பந்தப்பட்டோர் உணராமல் இருப்பது குறித்துத் தமது கவலையையும், அதிருப்தியையும் கூட வெளியிட்டிருக்கின்றார்.

ஆனால், அவர் இப்படி ஆளும் தரப்பின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பார்த்துக் குறைகூறும் விதத்தில் கருத்து வெளியிடுகின்றமையை நோக்கும்போது 'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்றதாம்' என்ற பழமொழியே தமிழர்களுக்கு நினைவுக்கு வருகின்றது.

ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை - ஆதங்கங்களை - வேணவாக்களை - புரிந்து கொள்ளவே முடியாத - அல்லது புரிந்து கொள்ள எத்தனிக்காத - சில இடதுசாரித் தலைவர்கள் தங்களை நடுநிலையான அதி மேதாவிகளாகக் கருதிக்கொண்டு, பௌத்த - சிங்களப் பேரினவாதிகளைப் பார்த்து நியாயம் உரைப்பதும், தத்துவம் பேசுவதும் மிகுந்த வேடிக்கையான விவகாரமாகும்.

அமைதித் தீர்வுக்கு வழி என்ன என்பது குறித்து ஆளும் தரப்பின் பிரதான கட்சிக்கு 'நல்லுபதேசம்' செய்ய முயலும் அமைச்சர் திஸ்ஸ விதாரண முதலில் அந்தப் பிரச்சினையின் அடிப்படைகளையும், பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் - தமிழ் தேசத்தின் - நியாயமான அபிலாஷைகளையும் அதன் பின்னணியில் புதைந்து கிடக்கும் நீதி நியமங்களையும் தாம் புரிந்து கொள்வது அவசியமாகும்.

மாவட்ட மட்டத்தில் அதிகாரத்தைப் பகிரும் திட்டம் எண்பதுகளின் முற்பகுதியில் பிரேரித்துத் தோல்வியடைந்து போன - மூடப்பட்ட - அத்தியாயம். அதை, ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தூக்கிப்பிடித்து நிற்பது இணக்கத்தீர்வுக்கு வழி சமைக்காது என்று அடித்துக் கூறும் அமைச்சர் திஸ்ஸ விதாரண, ஆகையினால் மாகாண மட்ட அரசியல் தீர்வுக்கு அக்கட்சி இணங்கவேண்டும் என்றும் வற்புறுத்துகின்றார்.

அமைதித் தீர்வுக்கு வழியாக முன்வைக்கப்பட்ட மாவட்ட மட்ட அதிகாரப் பகிர்வு முயற்சி எண்பதுகளின் ஆரம்பத்திலேயே தோற்றுப் போன விடயம் என்றால், அமைச்சர் திஸ்ஸ விதாரண இப்போது தூக்கிப்பிடிக்கும் மாகாண மட்ட அதிகாரப்பகிர்வுத்திட்டம் எண்பதுகளின் இறுதியிலேயே பிசுபிசுத்துப்போன அம்சமாகும். அதுவும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த - ஒன்றுபட்ட தமிழர் தாயகத்திற்கு - அதிகாரப்பகிர்வு என்ற திட்டம் இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம், இந்தியாவின் நேரடி உறுதிப்படுத்தலோடு முன்வைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு, பயனின்றி முடிந்த - காலாவதியாகிப் போன - முயற்சி.

இணைந்த - ஐக்கியப்பட்ட - தமிழர் தாயகத்துக்கான மாகாண ரீதியிலான அதிகாரப் பகிர்வு முயற்சியே, இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு தராமல் தோற்றுப் போன சூழலில், இப்போது வடக்கு, கிழக்கைப் பிரித்துத் துண்டுபட்ட தமிழர் தாயகத்துக்கு மாகாணங்கள் மட்டத்தில் அதிகாரத்தைப் பகிரும் பகிர்வு யோசனையை பெரிய விடயமாகத் தூக்கிக்கொண்டு, தாம் புதிய கண்டுபிடிப்பை எட்டிவிட்டவர் மாதிரி புதுக் கோஷத்தோடு வலம் வருகின்றார் திஸ்ஸ விதாரண.

ஏதோ மாவட்ட மட்ட அதிகாரப்பகிர்வு என்ற கீழ் நிலையை விட்டு, மாகாண மட்ட அதிகாரப்பகிர்வு என்ற நிலைமைக்கு ஜனாதிபதியும் அவரது ஆளும் கட்சியும் மேலேறி வந்துவிட்டால், சாத்தியமான தீர்வு கிட்டும் என்று கதை விடுவதன் மூலம் தமிழரின் தேசிய இனப் பிரச்சினை விவகாரத்தில் அனைவரினதும் கவனத்தையும் தவறான திசைக்கு திருப்ப முயல்கிறார் அமைச்சர் திஸ்ஸ விதாரண. அவரது அபத்த வாதத்தை எண்ணி வேதனைப்படுவதைத் தவிர தமிழருக்கு வேறு வழியே இல்லை.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் யதார்த்தப் புறநிலைகளையும், அதன் உட்கிடையாகப் புதைந்து கிடக்கும் வரலாற்று நியாயங்களையும், புரட்சிகரமான மாற்றத்துக்காக ஆயுதம் ஏந்தி நிற்கும் தமிழ் இளைஞர்களின் மனவெழுச்சியின் தீவிரத்தையும் புரிந்துகொள்ளாத சிங்களத் தலைமைகள் காலத்துக்குக் காலம் - அர்த்தமற்ற - அபத்தமான - யோசனைத்திட்டங்களை தீர்வு வடிவங்களாகப் பிரேரித்து உலகை ஏமாற்றுவதற்கு முயற்சிக்கத் தவறுவதில்லை. அந்த வகையில் - வரிசையில் - திஸ்ஸ விதாரண தரப்பு யோசனையும் ஓர் அலங்காரமாக இப்போது வெளிவந்திருக்கின்றது.

இலங்கைத் தீவில் தனியான மொழி, பாரம்பரியம், பண்பாடு, நீண்ட கால ஆட்சி நிர்வாகம், தனியாகத் தாயக நிலப்பரப்பு ஆகியவற்றைக் கொண்டு காலங்காலமாக வாழ்ந்து வரும் தனித் தேசிய இனத்தவர்கள் தமிழர்கள்.

அவர்கள் தனித்துவமான தேசிய இனக் கட்டமைப்பைக் கொண்டவர்கள். அவர்களுக்கு தனித்துவமான - இனங்காணக்கூடிய - தாயகம் உண்டு. அத்தகைய தமிழர் தேசத்துக்கு எவராலும் பறித்தெடுக்க முடியாத சுய நிர்ணய உரிமை உண்டு. - இதுவே திம்புக் கோட்பாடாக சகல தமிழர் தரப்புகளாலும் ஒன்றிணைந்து - இருபத்தியிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் - தங்களது ஒருமித்த நிலைப்பாடாக ஒரே குரலில் முன்வைக்கப்பட்டது.

இந்த அடிப்படைகளை ஏற்று அங்கீகரிக்காத - அவற்றின் வழி அமையாத - எந்தத் தீர்வுத்திட்டமும் - அது மாவட்ட மட்டம் அல்ல, மாகாண மட்ட அதிகாரப் பரவலாக்கலுக்கு வழி செய்தாலும் கூட - தமிழர் தரப்பால் ஏற்கப்படவே மாட்டாது. நிரந்தர தீர்வுக்கு அவை வழி செய்யா. அத்தகைய பொருத்தமற்ற திட்டங்களை வைத்துக் கொண்டு வீண் கதை பேசுவதிலும் - பகல் கனவு காணுவதிலும் - பயனேதுமில்லை. இதை தென்னிலங்கை இடதுசாரி வேடதாரிகளும் புரிந்து கொள்வது நல்லது.

# குடாநாடு முழுவதும் மின் தடை ஏற்படுவதைத் தவிர்க்க மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 20

குடாநாடு முழுவதும் மாலை 6 மணி முதல் இரவு 9.30 மணிவரையும் மின்வெட்டு நடைமுறைக்கு கொண்டு வருவதைத் தவிர்க்க வசதியாக, அதற்கு உதவும் பொருட்டு - மின் பாவனையாளர்கள் கட்டுப்பாடாக - சிக்கனமாக - மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மேற்கண்டவாறு மக்களிடம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைக் காலமாக யாழ்.மாவட்டத்தில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலைமைகளின் கீழ், மின் உற்பத்தியை அதிகரிக்க இயலாமலுள்ள நேரத்தில், மின்பாவனையாளர்களின் அளவு அதிகரித்திருப்பதோடு பாவிக்கப்படும் மின்சாரத்தின் அளவும் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இவ்வாறான நிலைமை குறிப்பிட்ட நேரத்தில், அதாவது மாலை 6 மணி முதல் இரவு 9.30 மணி வரையான நேரத்தில் ஒட்டுமொத்தமாக யாழ்.மாவட்டத்தில் மின்வெட்டை அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து மின் பாவனையாளர்களும் குறிப்பாக மின்வெட்டை அமுல்படுத்தாத பகுதிகளில் உள்ள மின்பாவனையாளர்களும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரையான நேரத்தில் இயன்றவரை மிகவும் சிக்கனமாக, மின்விளக்குகளின் எண்ணிக்கை உட்பட அதிக மின்சாரம் தேவைப்படும் மின்சார உபகரணங்கள் பயன்படுத்துவதைத் தவிர்த்து (உ-ம்: குளிரூட்டி, சலவை இயந்திரம்) அவசியமான மின்சார விநியோகத்திற்கு மின்சார சபையுடனும், மாவட்ட நிர்வாகத்துடனும் இணைந்து செயற்படுமாறு அனைத்து யாழ்.மாவட்ட மின்பாவனையாளர்களையும் தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த அறிவித்தல் மூலம் மின்சார சபைக்குரிய பொறுப்பைத் தட்டிக் கழிக்க முயற்சிக்கவில்லை என்பதையும் மின்சார விநியோக நிலைமையை முன்னேற்றுவதற்குரிய நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படுகின்றது எனவும் அறியத்தருகின்றோம்- என்றுள்ளது. (அ-1)

# முப்படைகளுக்கும் 50 ஆயிரம் பேரை புதிதாகச் சேர்க்க ஜனாதிபதி உத்தரவு

### ஏனைய அமைச்சுகளில் இப்போதைக்கு வேலை வாய்ப்பு இல்லை?

கொழும்பு, ஜூன் 20

முப்படைக்கும் 50ஆயிரம் பேரைப் புதிதாகச் சேர்ந்துக் கொள்ளும் திட்டத்தைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சைப் பணித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகள் வெற்றி பெற்று வருவதைத் தொடர்ந்து அதனைத் தொடர்ந்து நிலை நிறுத்திக் கொள்வதற்கு இது அவசியம் என்று ஜனாதிபதி கருதுகின்றார்.

நாட்டின் சரித்திரத்திலேயே பாதுகாப்புப் படையினக்கு ஆள்சேர்க்கும் மிகப் பெரிய முயற்சி இது என்று குறிப்படும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர், இராணுவத்திற்கு 25 ஆயிரம் பேரும், கடற்படைக்கு 15ஆயிரம் பேரும், விமானப் படைக்கு 10 ஆயிரம் பேரும் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

கிழக்கில் கைப்பற்றப்பட்ட இடங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கு மேலதிகமாக ஆள்கள் தேவைப்படுகிறார்கள் என முப்படைத் தளபதிகள் தெரிவித்ததைத் தொடர்ந்தே ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை- குறைந்தது ஒரு வருட காலத்திற்காவது அவரவர் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் வேலைவாய்ப்பு எதுவும்வழங்க வேண்டாம் என்று ஜனாதிபதி அமைச்சர்களைக் கேட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (அ-ப)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 20

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா தெரிவித்துள்ளார்.

* * *

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் நான்கு வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடப் பரீட்சைகள் நாளை நடைபெறவுள்ளன.

நாளை காலை 8 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் உரிய வினாத்தாள்களைப் பெற்று பரீட்சையை நடத்தி பி.ப 2.30 மணிக்கு விடைத்தாள்களை வலயக் கல்வி அலுவலகத்தில் கையளிக்குமாறு தரம் 4 வகுப்பு ஆங்கில பாட ஆசிரியர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (203-207)

* * *

சண்டிலிப்பாய் கல்வி கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டிகள் இன்று மானிப்பாய் மெமேறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் நாளை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி தலைமையில் இப்போட்டி நடைபெறவுள்ளது. (1-135)

## சந்திரிகாவின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 20

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கான பாதுகாப்பு அலுவலர்களின் எண்ணிக்கை 7 இல் இருந்து 69 ஆக உடனடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை குமாரதுங்கவின் தனிப்பட்ட உதவியாளரான பி.திசாநாயக்க வெளியிட்டுள்ளார். கடந்த மே மாதம் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றுக்கமைய அவரது பாதுகாப்பு அலுவலர்களின் எண்ணிக்கை 198 இல் இருந்து 7 ஆகக் குறைக்கப்பட்டது.

தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதால் இலங்கையில் தமது நடமாட்டங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியிருப்பதாக குமாரதுங்க சமீபத்தில் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருந்தார். (ப)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 20

மானிப்பாயில் கஞ்சா வைத்திருந்த நபர் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டபோது, சம்பந்தப்பட்டவரை எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## காணாமற் போனவர் கப்பூது வெளியில் சடலமாக மீட்பு

உடுப்பிட்டி, ஜூன் 20

வடமராட்சி, கப்பூது வெளியில் ஊதி, உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

கரணவாய் கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த வாகனத் திருத்துநரான திரவியம் விஜயகுமார் (வயது 40) என்பவரது சடலமே இதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் கடந்த 12ஆம் திகதி காணாமற் போனதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிவான் க. அரியநாயகம் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (203-155)

## சங்கானையில் காவலரண் மீது நேற்று கிரனேட் தாக்குதல்

சங்கானை, ஜூன் 20

சங்கானைச் சந்தைக்கு அருகில் அமைந்துள்ள காவலரண் மீது நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலை அடுத்து சந்தைக்கு வந்தவர்களும் நகருக்கு வேறு அலுவல்களாக வந்தவர்களும் அங்கிருந்து சென்றுவிட்டனர். வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டன.

சம்பவத்தின் பின்னர் படையினரின் சோதனைகளும் ரோந்தும் அதிகரித்துக் காணப்பட்டன. (அ-1-29)

## சட்டவிரோத மின்சாரம் பெற்றோருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

அளவெட்டிப் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஏழு பேருக்கு மல்லாகம் நீதிமன்றம் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்தது.

தெல்லிப்பழைப் பொலிஸாரால் மல்லாகம் நீதிமன்றில் இவர்கள் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து தலா 15 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (அ-1)

# 12,000 குடும்பங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தெரிவிக்கையில் -

சம்பூர், மூதூர் கிழக்கு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய 6 கிராம சேவகர் பிரிவுகளிலும் உள்ள ஏறத்தாள 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்களின் பூர்வீக நிலங்கள் அரசின் இந்த நடவடிக்கையால் அபகரிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 5,547 சதுர மீற்றர் தமிழர் நிலம் அரசினால் கபளீகரம் செய்யப்பட்டுவிட்டது.

### கோயிலும் அழிக்கப்படும்

இதனால் பத்து பாடசாலைகள், சம்பூரில் உள்ள பத்திரகாளி அம்மன் ஆலயம் 600 இற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் என்பன அழிக்கப்படவுள்ளன.

வளமான விளைநிலங்களையும் விவசாயத்தையும், கால்நடை வளர்ப்பையும் பிரதான தொழிலாகக் கொண்ட இப்பிரதேச மக்களை பாட்டாளிபுரம், நல்லூர் போன்ற தரிசு நிலப் பிரதேசங்களில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற் கொண்டு வருகின்றது.

பாரம்பரிய நிலங்களையும், வளமான விளை நிலங்களையும் இழக்கவுள்ள நிலையில் எதிர்காலத்தில் தொழில் வாய்ப்பையும் இழக்கும் நிலைக்கு இப்பிரதேசத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

அண்மைக்கால போர் நடவடிக்கைகளால் வாழ்விடங்களையும் உடைமைகளையும் இழந்துநிற்கும் இப்பிரதேச மக்கள் அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரகடனத்தால் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் - என்றார்.

இதேவேளை - இப்பிரதேசத்தை அரசு பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்யவுள்ளதாகவும் இப்பிரதேசங்களில் வாழ்ந்து வந்த மக்கள் வேறு இடங்களில் குடியேற்றப்படவுள்ளதாகவும் அரசு வெளியிட்ட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அரசாங்கம் மூதூர் கிழக்கை அரசு அதியுயர் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப் படுத்தியுள்ளமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ் விவகாரத்தை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கும் இப்பிரகடனத்தை எதிர்த்து வழக்கொன்றைத் தாக்கல் செய்வதற்கும் தீர்மானித்துள்ளது. (அ-151-203)

## நாளை

ஆனி - 07 வியாழக்கிழமை
21.06.2007
திதி : சஷ்டி காலை 06.57
நட்சத்திரம் : பூரம் பின்னிரவு 01.17
[illegible] : 07.21 - 08.54
ராகுகாலம் : 01.21 - 02.54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கள - சிறிபதியின் புதிய கட்சி அறிமுகம்

கொழும்பு, ஜூன் 20

ஆளும் சுதந்திரக் கட்சியின் அதிருப்திக் குழுவினர் புதிய தொரு அணியை உருவாக்கியுள்ளனர். முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி (மக்கள் பிரிவு) எனும் புதிய அணி தோற்றம்பெ…றுள்ளது.

நேற்று நா…ளுமன்றுக்குச் சென்ற மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராச்சி ஆகியோர் எதிர்க்கட்சி முன்வரிசையில் அமர்ந்துள்ளனர்.

இதனைப் பார்வையிட்ட சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும் கூச்சலை எழுப்பவே மங்கள சமரவீர எழுந்து ஆளும் கட்சியின் நடவடிக்கையில் அதிருப்தி அடைந்த தாம் புதியதொரு அணியை உருவாக்கியுள்ள… தெரிவித்தார். நா… …மை (வெள்ளியன்று) இந்தப் புதிய அணி உத்தியோகபூர்வமாகத் தொடங்கிவைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (சி)

## வர்த்தகர் விடுவிப்பு

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை கடத்தப்பட்ட பிரபல இந்திய வம்சாவளி வர்த்தகர் ஜோன்சன் வேதமாணிக்கம் நேற்று விடுவிக்கப்பட்டார். வெள்ளைவத்தையில் உள்ள வங்கி ஒன்றுக்குச் சென்ற இவர் பின்னர் அடையாளந்தெரியாதோரால் கடத்தப் பட்டிருந் தார்.

இந்தநிலையில் இவர் நேற்று வெல்லவாய பகுதியில் வைத்து விடுவிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

**துரித தபால்கள், பொதிகள் சேவை**

உள்நாட்டு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள் உணவுப் பொருள்கள், அன்பளிப்பு பொருள்கள், உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021 222 7835

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
தொலைபேசி - 021 222 7310

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் முத்தையா சண்முகநாதன்

மலர்வு: 05.02.1917

உதிர்வு: 21.05.2007

கடந்த (21.05.2007) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.06.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இல. 168, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### மகாதேவா மனோகரன்



இல. 735, மானிப்பாய் வீதி, ஆலடிச்சந்தியைச் சேர்ந்த மகாதேவா மனோகரன் நேற்று (19.06.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மகாதேவா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் கருணாநிதி, அன்பழகன், அமிர்தலிங்கம், வசந்தராசா, ஆனந்தநாயகி, மஞ்சுளா ஆகியோரின் அன்புச் சகோதரரும் நிர்மலா, நவரெத்தினம், இரவிச்சந்திரன், சரஸ்வதிமண்டல் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2007) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 735, மானிப்பாய் வீதி,
ஆலடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:
மு.மகாதேவா (தந்தை)

(61964)

### சின்னையா திசைவீரசிங்கம் (குமாரு)



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா திசைவீரசிங்கம் (குமாரு) 17.06.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.06.2007 செவ்வாய்க்கிழமை நண்பகல் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மட்டுவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
தி.மீனாம்பாள் (மனைவி),
அ.பாலகுமார் (ரசி-பேரன்).

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

வடமாகாணத்தில் உள்ள தேசிய பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை கல்வி அமைச்சுக் கோரியுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் வவுனியா தமிழ் தேசிய பாடசாலை ஆகியவற்றில் இந்த வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்னர் தகுதியானவர்களை விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை இசுறுபாயவில் உள்ள கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்ப வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (1-86)

## அல்லாரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதலின் போது ஏற்பட்ட சேத விவரம் குறித்து நேற்று மாலை வரை விவரம் எதுவும் தெரியவரவில்லை.

மோதலை அடுத்து அப்பகுதியில் படையினரின் தேடுதல் இடம்பெற்றது.

## புலிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவேண்டும். அவர் வளையாத மனிதர். தனியரசு என்பதைத் தவிர வேறு எந்த ஒரு வார்த்தையையுமே ஒப்புக் கொள்வதாக அவர் சொன்னதே இல்லை. நமது தலைவர்களை அவர் தவறாக புரிய வைத்திருக்கிறார். அதே நேரத்தில் தாம் செய்யும் சவாரிக்காக வெளிநாட்டுத் தலைவர்களை அவர் கைக்குள் போட்டுள்ளார் - என்றார் அவர். (அ-1)

## தமிழக மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியிலிருந்து தொழிலுக்குப் புறப்பட்டுச் சென்றனர் என்றும், இதில் குணபாலன் (வயது - 23) என்ற இளைஞர் கச்சதீவு கடற்பரப்பில் மீன் பிடித் துக்கொண்டிருந்தார் என்றும், அச்சமயம் அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் குறித்த இளைஞரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் படுகாயமுற்ற அவர் கடலுக்குள் நதித்த நிலையில் ஏனைய மீன வர்க… காப்பாற்றப்பட்டு கரை சேர்ந்தார் எ…றும் தமிழகச் செய்திகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

தமிழக …னவர்களுக்கு எதிராகத் தொடர்சியாக இரண்டு நாள்கள் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றதால் இராமேஸ்வரம் பகுதியில் பதற்றம் தொடர்வதாக நேற்றுக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (சி)

## அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவாறு தப்பிப் பிழைத்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒன்பது உறுப்பினர்களும் நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் காணப்படவில்லை.

பிரேரணைக்கு ஆதரவாக 107 வாக்குகளும் எதிராக 87 வாக்குகளும் கிடைத்தன.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய பிரதான கட்சிகள் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததால் இந்தப் பிரேரணை அரசுக்கு ஒரு பலப்பரீட்சையாகி அதில் ஆளும் தரப்பு கவிழ்ந்து போய்விட வாய்ப்பிருப்பதாகக் கணிக்கப்பட்டது.

ஆயினும் இருபது மேலதிக வாக்குகளால் அரசு தப்பிவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி, மேலக மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர். ஆளுங்கட்சியுடன் சேர்ந்து ஹெல உறுமய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன பிரரேணைக்கு ஆதரவாக வாக்களித்தன. (சி)

**இலத்திரனியல் பொருள்கள் விற்பனைக்கு**

T.V. 14" சொனி கலர், டெக் (பனசொனிக்), சி.டி பிளேயர் (சம்சுன்)

தொடர்பு:
50/4, சங்கிலியன் வீதி,
நல்லூர். தொ.பே: 021 222 8371

**திருமண சேவை**

எம்மிடம் அரச, உயர் பதவி, வெளிநாடு, உள்நாடு மணமக்கள் ஜாதகக் குறிப்புகள் வி… …ளுடன் உள்ளன. நேரில் தொடர்பு
K.C.திருமண சேவை
49/1,பூநாரி லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தொ.பே: 4591225

# 'தமிழ்நெற்' முடங்கியது

கொழும்பு, ஜூன் 20

'தமிழ்நெற்' இணையத்தளத்தை இலங்கை அரசு முடக்கியுள்ளது என்று தமிழ்நெற் இணையத் தளம் அறிவித்துள்ளது.

கடந்த 11 ஆண்டுகளாக இலங்கையின் வடக்குக் கிழக்குச் செய்திகளை சுயாதீனமாகத்தெரிவித்துவந்த இந்த இணையத் தளம் தற்போது முடக்கப்பட்டுள்ளது எனவும், இதில் ஆச்சரியப்படுவதற்கு எதும் இல்லை என்றும் அந்த இணையத்தள நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## இலங்கை கேட்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ராடர்' உள்ளிட்ட கருவிகளை எம்மிடம் இலங்கை கேட்டிருக்கின்றது. அதற்கமைய அவர்களுக்குத் தேவையான எல்லாவகை உதவிகளையும்நாம்செய்வோம். அதில் எந்தச் சிக்கலும் இல்லை -

எனினும் அங்கு (இலங்கையில்) நிலவும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சரிப்படாது. அரசியல் தீர்வே ஒரே வழி - என்றும் அந்தோனி தமது உரையில் தெரிவித்தார். (சி)

## வெற்றிலைக்கேணி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்ததை அறிந்து நேற்று மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரையும் அப்பகுதி நோக்கிக் கடும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. பல்லப்பை, வரணி முகாம்களில் இருந்தும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கிபீர் விமானங்களும் அப்பகுதியில் வட்டமிட்டு நோட்டம் இட்டதைக்கேட்க முடிந் தது.

நேற்றைய மோதல்களில் விடுதலைப் புலிகளின் பத்துப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டது என்றும் சண்டை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க ஊடகங் களுக்கு நேற்றிரவு தெரிவித்தார்.

மோதல்கள் குறித்து விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (அ-1)

## மரண அறிவித்தல்கள்

### கதிரிப்பிள்ளை சங்கரப்பிள்ளை



கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை சங்கரப்பிள்ளை நேற்று (19.06.2007) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும் செல்லத்தின் அன்பு கணவரும் காலஞ்சென்ற சின்னையா - நாகம்மா தம்பதியரின் மருமகனும் தங்கம்மா, வைரமுத்து ஆகியோரின் சகோதரரும் சாந்தகுணதேவி, சண்முகராசா, செல்வராணி, சிவகுமார், குமுதினி, கௌரி, மீரா, ஜெயக்குமார், யசோதா, உதயகுமார், சதீஸ்குமார் ஆகியோரின் தந்தையும் தேவராசா, தவம், குகதாசன், சுகந்தினி, வரதராசா, மனோகரன், நித்தியராஜா, சத்தியா, கரிகரன், தயாளினி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆழங்குழாய்,
சண்டிலிப்பாய்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(61966)

### செல்வி கிருசாந்தினி இராசரத்தினம்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கிருசாந்தினி இராசரத்தினம் நேற்று (19.06.2007) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் இராசரத்தினம் (இளைப்பாறிய அலுவலக ஊழியர், யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்) - திலகேஸ்வரியின் அன்பு மகளும் ஜீவகுமார், பிறேமகுமார், பிரசாந்தினி (கொக்குவில் இந்து கல்லூரி - 2006 உயர்தரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2007) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உதயசூரியன் சனசமூக நிலையம்
அருகில்,
ஏழாலை மேற்கு, ஏழாலை.

தகவல்:
இராசரத்தினம் குடும்பத்தினர்.

(61963)

### துரைரத்தினம் தேவதாசன்

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் நியூசிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைரத்தினம் தேவதாசன் 14.06.2007 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைரத்தினம் - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் கிறேஸ் சாந்தலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சாமுவேல், தர்சன், டிலாணி, நிசாணி, ரொசாணி (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இயேசுதாசன், விஜயதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவபுத்திரி, காலஞ்சென்ற எலிசபேத், ஜெயராணி ஆகியோரின் மைத்துனரும் எமலின் றொசானனின் (கொழும்பு) சிறிய தந்தையும் நோயல் - விஜயரூபன் (பொறியியற்பீட இறுதியாண்டு மாணவன், பேராதனை பல்கலைக்கழகம்), டானியல் ஜெயரூபன் (ஆசிரியர், சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (20.06.2007) புதன்கிழமை நியூசிலாந்தில் நடைபெறும். அதேவேளை அன்னாரின் வாழ்வுக்கும் பணிக்கும் நன்றி செலுத்தும் ஆராதனை இன்று (20.06.2007) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அராலி வடக்கு தென் இந்திய திருச்சபை ஆலயத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென். ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்,
தொ.பே. 077 9239386.

தகவல்:
வி. டானியல் ஜெயரூபன்
(பெறாமகன்)

(61961)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org